மனநல ஆற்றல் சட்டம்

# டோனீக்கான ஒரு வழிகாட்டி

OFFICE OF THE PUBLIC GUARDIAN

# உள்ளடக்கங்கள்


**பகுதி A** **மனநல ஆற்றல் சட்டம் என்றால் என்ன மற்றும் நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?** **04**

A1. மனநல ஆற்றல் என்றால் என்ன? 04

A2. மனநல ஆற்றல் சட்டம் என்றால் என்ன, அது ஏன் முக்கியமானது? 05

A3. நடைமுறை விதிமுறைகள் 06

A4. நீண்டகால அதிகாரப் பத்திரம் 06

**பகுதி B** **பொது காப்பாளர் அலுவலகத்தின் கடமைகள் என்ன?** **08**

B1. பொது காப்பாளர் 08

B2. பொது காப்பாளரின் செயல்பாடுகள் 08

B3. பொது காப்பாளர் அலுவலகம் 09

B4. வருகையாளர்கள் கழகத்தின் பணிகள் 09

**பகுதி C** **நான் டோனீயாக நியமிக்கப்பட்டால் என்ன நடக்கும்?** **10**

C1. இரண்டு வகையான டோனீக்கள் யார்? 10

C2. தனிப்பட்ட நலனுக்கான டோனீ 10

C3. தனிப்பட்ட நலனுக்கான டோனீயாக நான் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை என்ன? 12

C4. மற்ற கட்டுப்பாடுகள் 14

C5. விலக்கப்பட்ட முடிவுகள் என்ன? 15

C6. தனிப்பட்ட நலன் டோனீயாக எனது அதிகாரங்கள் எப்போது முடிவடையும்? 16

C7. சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீ 16

C8. சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீயாக நான் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை என்ன? 17

C9. சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீயாக எனது அதிகாரங்கள் எப்போது முடிவடையும்? 19

C10. மற்ற கேள்விகள் 20

C11. ஒரு டோனீ எவ்வாறு முடிவுகளை எடுத்து மற்றும் செயல்பட வேண்டும்? 20

C12. நான் ஒரு டோனியாக எப்படிப் பாதுகாக்கப்படுவேன்? 21

**பகுதி D** **ஒரு டோனியாக நான் என்ன முடிவுகளை எடுக்க முடியும்?** **22**

D1. நான் என்ன முடிவுகளை எடுக்க வேண்டும், எப்போது எடுக்க வேண்டும்? 22

D2. எப்போது முடிவெடுக்க வேண்டும் என்று எனக்கு எப்படித் தெரியும்? 22

D3. டோனர் மேம்பட்ட பராமரிப்புத் திட்டத்தை (ACP) செய்திருந்தால் அதையும் கருத்தில் கொள்ளவும் 23

D4. ஐந்து சட்டக் கோட்பாடுகளை நான் எப்படிப் செயல்படுத்துவது? 23

**பகுதி E** **ஒரு சர்ச்சையின் போது என்ன நடக்கிறது?** **29**

E1. சர்ச்சை ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்? 29

**பகுதி F** **மேலும் தகவலை நான் எங்கே காணலாம்?** **32**

**சொற்களஞ்சியம்** **33**

நீங்கள் ஒரு டோனீயின் பாத்திரத்தை ஏற்க நியமிக்கப்பட்டால், இந்தக் கையேடு உங்களுக்கு வழிகாட்டுதலை வழங்கும். இது உங்கள் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய கண்ணோட்டத்தை உங்களுக்கு வழங்கும்.

ஒரு டோனீயாக, தாங்களாகவே முடிவெடுக்கும் மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபரின் சார்பாக முடிவுகளை எடுப்பதற்கும் செயல்படுவதற்கும் நீங்கள் பொறுப்பாவீர்கள்.

நிதி விவகாரங்கள், மருத்துவ சிகிச்சை அல்லது தனிப்பட்ட நலன் சார்ந்த விஷயங்களில் கடினமான அல்லது சிக்கலான முடிவெடுப்பதை நீங்கள் சந்தித்தால், சுயாதீனமான சட்ட மற்றும்/அல்லது பிற தொழில்முறை ஆலோசனையைப் பெறுமாறு பரிந்துரைக்கிறோம்.

இந்த வழிகாட்டியில் உள்ள காட்சிகளும் எடுத்துக்காட்டுகளும் விளக்கத்திற்காக மட்டுமே. பயன்படுத்தப்படும் கதாபாத்திரங்களும் சூழ்நிலைகளும் கற்பனையானவை. அவை பொருத்தமான சந்தர்ப்பங்களில் தொழில்முறை ஆலோசனைக்கு மாற்றாக அல்லது இதேபோன்ற சூழ்நிலைகளில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகளுக்கு எந்த வகையிலும் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. எந்தவொரு குறிப்பிட்ட வழக்கையும் நீதிமன்றம் எவ்வாறு தீர்ப்பளிக்கும் என்பதை அவை சுட்டிக்காட்டவில்லை, ஏனெனில் அது நீதிமன்றத்தின் முன் இருக்கும் ஒவ்வொரு வழக்கின் உண்மைகளைப் பொறுத்தது, அவை உதாரணங்களில் கருத்தில் கொள்ளப்படாத தொடர்புடைய உண்மைகளை உள்ளடக்கியிருக்கலாம்.

# நாம் தொடங்கும் முன்

# பகுதி A


## மனநல ஆற்றல் சட்டம் என்றால் என்ன, நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

### A1. மனநல ஆற்றல் என்றால் என்ன?

மனநல ஆற்றல் என்பது ஒரு நபரின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட முடிவை எடுக்கும் திறன் ஆகும்.

மனநல ஆற்றல் ஒவ்வொரு வழக்கின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது மற்றும் ஒரு குறிப்பிட்ட மருத்துவ நிலையில் உள்ள நபரின் அடிப்படையில் மட்டுமே என்று கருத முடியாது. மேலும், ஒரு நபரின் மனநல ஆற்றல் இல்லாமை பின்வருவனவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது:

- வயது;
- தோற்றம் – சில மருத்துவ நிலைகளின் உடல் பண்புகளை உள்ளடக்கியது (உதாரணமாக, மன நலிவு நோய் (Down syndrome) அல்லது பெருமூளை வாதத்தால் ஏற்படும் தசை பிடிப்புகளுடன் தொடர்புடைய அம்சங்கள்) அத்துடன் ஆடை அல்லது தூய்மையின் நிலை போன்ற தோற்றத்தின் அம்சங்கள்;
- நிலை – இதில் உடல் குறைபாடுகள், அறிவுசார் குறைபாடுகள், வயது தொடர்பான நோய்கள் அல்லது குடிப்பழக்கம் போன்ற தற்காலிக நிலைமைகள் ஆகியவை அடங்கும்; அல்லது
- நடத்தை – இது மற்றவர்களுக்கு வழக்கத்திற்கு மாறானதாகத் தோன்றும் நடத்தையை உள்ளடக்கியிருக்கலாம், உதாரணமாக, முன்னும் பின்னுமாக ஆடுவது, தனக்கு தானே பேசுவது அல்லது பொருத்தமில்லாத சிரிப்பு. புறந்தள்ளப்பட்ட நடத்தை, எடுத்துக்காட்டாக, கூச்சலிடுதல் மற்றும் சைகை செய்தல், மற்றும் பேச மறுப்பது அல்லது கண் தொடர்பைத் தவிர்ப்பது போன்ற சமூகத்திலிருந்து விலகியிருக்கும் நடத்தை ஆகியவையும் இதில் அடங்கும்.



# A2. மனநல ஆற்றல் சட்டம் என்றால் என்ன, அது ஏன் முக்கியமானது?

மனநல ஆற்றல் சட்டம் (சட்டம்) மக்களை முன்கூட்டியே திட்டமிட உதவுகிறது மற்றும் அவர்களின் மனநல ஆற்றலை இழக்கும் முன் அவர்களின் எதிர்காலத்திற்கான தேர்வுகளை செய்ய அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. 21 வயது அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தாங்களாகவே அந்த முடிவுகளை எடுப்பதற்கான மனநல ஆற்றல் இல்லாதபோது அவர்கள் முடிவுகளை எடுக்க வேண்டியதன் அவசியம் உள்ளபோது இது உதவுகிறது.

சட்டம் மேலும்:

a. மக்கள் எதிர்காலத்தில் அவர்களுக்கு மனநல ஆற்றல் குறைவாக இருந்தால் அவர்கள் சார்பாகச் செயல்படுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை (டோனீ(க்கள்)) தானாக முன்வந்து நியமித்து, நீண்டகால அதிகாரப் பத்திரத்தை (LPA) உருவாக்க மக்களை அனுமதிக்கிறது;

b. முடிவெடுக்க வேண்டிய நிலையில் மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபரின் சார்பாக முடிவுகளை எடுக்க அவருக்கு பதிலாக தீர்மானம் எடுப்பவர் இல்லாத போது ஒரு அதிகாரம் பெற்ற பிரதிநிதியை நியமிக்க நீதிமன்றத்தை அனுமதிக்கிறது;

c. அறிவு சார்ந்த குறைபாடுள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியாக நியமிக்க அல்லது பெற்றோர்கள் இறந்துவிட்டால் அல்லது பெற்றோர்கள் தங்கள் மனநல ஆற்றலை இழந்தால், மற்றொருவரை வாரிசு அதிகாரம் பெற்ற பிரதிநிதியாக நியமிக்க நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க அனுமதிக்கிறது;

d. சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், அந்த நபரின் நன்னலன்களுக்காக அந்தச் செயல் செய்யப்பட வேண்டும் என்பது உட்பட, மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபருக்கு கவனிப்பு மற்றும் சிகிச்சையை வழங்கும் எவராலும் செய்யப்படும் செயல்களுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பை வழங்குகிறது;

e. மனநல ஆற்றல் இல்லாத நபர்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புகளை வழங்குகிறது;

f. மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபருக்கு சார்பாக எந்த முடிவையும் எடுக்கவோ அல்லது எந்த நடவடிக்கையும் எடுக்கும் எவரும் பின்பற்ற வேண்டிய ஐந்து சட்டக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது; மற்றும்

g. பதிவுசெய்யப்பட்ட வல்லுநர்களை ஊதியத்திற்காக அதிகாரம் பெற்ற பிரதிநிதி சேவை மற்றும் டோனீ சேவைகளை வழங்க அனுமதிக்கிறது.

ஒரு நபருக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சில முடிவுகளை எடுக்கும் திறன் இருக்கலாம், ஆனால் எல்லா முடிவுகளும் எடுக்க முடியாமலிருக்கலாம். உதாரணமாக, ஒரு நபர் சந்தைக்குச் சென்று உணவை வாங்க முடியும், ஆனால் பெரிய தொகையை கொண்டு முதலீட்டு முடிவுகளை எடுக்க முடியாது. மனநல ஆற்றல் காலப்போக்கில் மேம்படலாம் அல்லது குறையலாம்.

## A3. நடைமுறை விதிமுறைகள்

நடைமுறை கோட்பாடு மனநல ஆற்றல் சட்டத்தை விரிவாக விளக்குகிறது. மனநல ஆற்றல் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான கூடுதல் விளக்கத்தை இது வழங்குகிறது.

இது கீழ்கண்டவைகளுக்கு மக்களுக்கு உதவுகிறது:

- சட்டத்தின் கீழ் அவர்களின் பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்து கொள்ள
- எதிர்காலத்தில் ஒரு நேரத்தில் மனநல ஆற்றல் குறைவாக இருந்தால், தயார் செய்ய அவர்கள் எடுக்கக்கூடிய படிகளைப் புரிந்து கொள்ள; மற்றும்
- மனநல ஆற்றல் இல்லாத நபர்களைப் பராமரிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளைப் புரிந்து கொள்ள.

நடைமுறை கோட்பாடு என்பது மனநல ஆற்றல் இல்லாத ஒருவருடன் தொடர்பு கொள்ளும் அனைவரும் பின்பற்றக்கூடிய சிறந்த நடைமுறைகளின் வழிகாட்டியாகும். தொழில் வல்லுநர்கள் மற்றும் ஊதியம் பெற்ற பராமரிப்பாளர்கள் முறையான கடமையின் கீழ் இருப்பவர்களும் மற்றும் மனநல ஆற்றல் இல்லாத நபரின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் போன்ற முறைசாரா பராமரிப்பாளர்களும் இதில் அடங்குவர்.

மனநல ஆற்றல் இல்லாத ஒருவருக்காகச் செயல்படும் போது பின்வரும் நபர்கள் நடைமுறை கோட்பாடு களை கருத்தில் கொள்ள வேண்டும்:

a. நீண்டகால அதிகாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட டோனீ;

b. நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற பிரதிநிதி;

c. ஒரு தொழில்முறை திறனில் செயல்படும் நபர்கள், எடுத்துக்காட்டாக, ஒரு வழக்கறிஞர், சுகாதார நிபுணர், கணக்காளர், மருத்துவ வாகன குழுவினர்; மற்றும்d

d. ஊதியத்திற்காக செயல்படும் நபர்கள், எடுத்துக்காட்டாக, சேவைக்கு பணம் பெறும் பராமரிப்பாளர், சிகிச்சையாளர்.

நடைமுறை கோட்பாடு களில் உள்ள அனைத்து வழிகாட்டுதல்களையும் பின்பற்ற வேண்டும்.

## A4. நீண்டகால அதிகாரப் பத்திரம்

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) என்பது 21 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய (டோனர்) மற்றும் மனநல ஆற்றல் கொண்ட ஒருவர் தானாக முன்வந்து எதிர்காலத்தில் அவருக்கு மனநல ஆற்றல் இல்லாதபோது அவரது தனிப்பட்ட நலன், சொத்து மற்றும் விவகாரங்கள் அல்லது இரண்டு விஷயங்களுக்காகவும் அவர் சார்பாக முடிவுகள் எடுக்க மற்றும் செயல்பட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை (டோனீக்கள்) நியமிக்க அனுமதிக்கும் சட்ட ஆவணமாகும்..

டோனர் தனது மனதிறனை இழக்கும் போது பொதுவாக செயல்படுவதை நிறுத்தும் அதிகாரப் பத்திரம் போலல்லாமல், டோனர் தன் மனநலஆற்றலை இழக்கும் போது நீண்டகால அதிகாரப் பத்திரம் செயல்படும். நீண்டகால அதிகாரப் பத்திரம் தனிநபர்கள் அத்தகைய சாத்தியமான நிகழ்வைத் திட்டமிட அனுமதிக்கிறது.

தனிநபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இரண்டு வெவ்வேறு பரிந்துரைக்கப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திர படிவங்கள் உள்ளன:

1. நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) படிவம் 1, டோனர் அவர்களுடைய டோனீக்களுக்கு அடிப்படை நிபந்தனைகள் அல்லது இந்த அதிகாரங்களுக்கான கட்டுப்பாடுகளைத் தேர்ந்தெடுக்கும் விருப்பத்துடன் பொதுவான அதிகாரங்களை வழங்குவதற்கான தேர்வுப் பெட்டிகளைக் கொண்டுள்ளது,. இந்த படிவத்தை டோனர் தானாக பூர்த்தி செய்து கொள்ளலாம்.

2. நீண்டகால அதிகாரப் பத்திரம் LPA படிவம் 2 பெரும்பாலும் வெற்று உரையிடங்களை கொண்டுள்ளது, அங்கு தனிநபர்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப அதிகாரங்களைக் குறிப்பிடலாம். இந்த படிவம் ஒரு வழக்கறிஞரால் உருவாக்கப்பட வேண்டும்.

மனநல ஆற்றல் இருக்கும் போது டோனரால் நீண்டகால அதிகாரப் பத்திரம் உருவாக்கப்படும். எவ்வாறாயினும், டோனர் மனநலஆற்றலை இழக்கும் வரை, நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் கீழ் டோனீக்கு வழங்கப்பட்ட அதிகாரம் நடைமுறைக்கு வராது.

நீண்டகால அதிகாரப் பத்திரம் இது தொடர்பான முடிவுகளை உள்ளடக்கியது:

a. தனிப்பட்ட நலன் சார்ந்த விஷயங்கள் (பராமரிப்பு , எங்கு வாழ்வது, முதலியன பற்றிய முடிவுகளை அனுமதித்தல்), மற்றும்

b. சொத்து மற்றும் விவகாரங்கள் (வங்கிகள், மத்திய சேம நிதி விவகாரங்கள், சொத்தை விற்பது போன்றவற்றைப் பற்றி முடிவெடுக்க ஒரு டோனீயை அனுமதித்தல்).

நீண்டகால அதிகாரப் பத்திரம் பதிவுசெய்யப்பட்ட பிறகு, பதிவுசெய்யப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரத்தை பொது காப்பாளர் இணைய அலுவலகம் (OPGO) மூலம் டோனர் மற்றும் டோனீக்கள் பார்க்கலாம்.

## டோனர் சார்பாக மூன்றாம் தரப்பினருடன் பரிவர்த்தனை செய்தல்

டோனரின் சார்பாக வங்கிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற மூன்றாம் தரப்பு நிறுவனங்களுடன் பரிவர்த்தனை செய்ய, ஒரு
மருத்துவ பயிற்சியாளரால் சான்றளிக்கப்பட்டபடி டோனருக்கு மனநலஆற்றல் இல்லை என்று டோனீ முதலில் அறிவிக்க வேண்டும், மேலும் நிறுவனத்திற்கு கடவுச்சொல் பாதுகாக்கப்பட்ட மின்னஞ்சல் பதிவு செய்யப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரத்தை பொது காப்பாளர் இணைய அலுவலகம் (OPGO) மூலம் அனுப்ப வேண்டும்..

OPGO தொடங்குவதற்கு முன் பதிவு செய்யப்பட்ட அனைத்து நீண்டகால அதிகாரப் பத்திரங்களும் OPGO இல் கிடைக்கும். டோனீக்களும் மூன்றாம் தரப்பினரும் OPGO தொடங்கப்பட்ட பிறகு, டோனர் சார்பாக பரிவர்த்தனைகளுக்கு ஏற்கனவே உள்ள காகிதத்தில் பதிவு செய்யப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரங்களை இன்னும் உபயோகிக்க முடியும்.. இருப்பினும், OPGO இல் பதிவுசெய்யப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரங்கள் மட்டுமே சமீபத்திய புதுப்பிப்புகளைக் கொண்டிருக்கும். எனவே, காகிதத்தில் பதிவு செய்யப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரங்களை பயன்படுத்துவதற்குப் பதிலாக, OPGO வழியாக மூன்றாம் தரப்பினருக்கு சமீபத்திய புதுப்பித்தலுடன் பதிவுசெய்யப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரங்களை டோனீ அனுப்ப வேண்டும்.

# பகுதி B

## பொது காப்பாளர் அலுவலகம் என்ன செய்கிறது?

### B1. பொது காப்பாளர்

பொது காப்பாளர் மனநல ஆற்றல் இல்லாத மற்றும் பாதிக்கப்படக்கூடிய நபர்களின் கண்ணியம் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதில் செயல்படுகிறார். பொது காப்பாளர் பொது காப்பாளர் அலுவலகத்திற்கு (OPG) தலைமை தாங்குகிறார்.

### B2. பொது காப்பாளரின் செயல்பாடுகள்

மனநல ஆற்றல் இல்லாத நபர்களுக்கு உதவுவதற்க்கும் பாதுகாப்பதற்கும் பொது காப்பாளர் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்கிறார்.

இந்த செயல்பாடுகள் கீழ்கண்டவைகளை உள்ளடக்கும்:

a. நீண்டகால அதிகாரப் பத்திரங்களின் பதிவேடு மற்றும் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை நியமிக்கும் நீதிமன்ற உத்தரவுகளின் பதிவேட்டை பராமரித்தல்;

b. அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை மேற்பார்வையிடுதல்;

c. அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுதல்; மற்றும்

d. மனநல ஆற்றல் சட்டத்தில் ஏதேனும் விதிமீறல் பற்றி குற்றஞ்சாட்டப்பட்டால், டோனீக்கள் மற்றும் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தும் விதம் பற்றிய புகார்கள் உட்பட விசாரணை மேற்கொள்வது

## B3. பொது காப்பாளர் அலுவலகம்

- பொது காப்பாளர் அவர் செயல்பாடுகளை செய்வதில் பொது காப்பாளர் அலுவலகம் துணை நிற்கிறது.
- பொது காப்பாளர் அலுவலகம் OPG என்பது சமூக மற்றும் குடும்ப மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒரு பிரிவாகும்.

## B4. வருகையாளர்கள் கழகத்தின் கடமைகள்

வருகையாளர்கள் கழகம் கீழ்கண்டவற்றை செய்யவேண்டும்:

- பொது காப்பாளர் அல்லது நீதிமன்றத்தால் கோரப்படும் போது மனநல ஆற்றல் இல்லாத நபர்களை சென்று பார்ப்பது, டோனீக்கள் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை பார்வையிடவும், மற்றும்
- மனநல ஆற்றல் இல்லாத நபரின் நல்வாழ்வை கண்காணிக்கவும்.

இரண்டு வகையான பார்வையாளர்கள் உள்ளனர்:

a. சிறப்பு பார்வையாளர்கள் – பதிவுசெய்யப்பட்ட மருத்துவப் பயிற்சியாளர்கள் அல்லது மனம் அல்லது மூளையின் செயல்பாட்டில் குறைபாடு அல்லது தொந்தரவு பற்றி தொடர்புடைய நிபுணத்துவம் பெற்ற நபர்கள் மற்றும்

b. பொது பார்வையாளர்கள் – மருத்துவத் தகுதி இல்லாதவர்கள்.



# பகுதி C

## நான் டோனீயாக நியமிக்கப்பட்டால் என்ன நடக்கும்?

### C1. இரண்டு வகையான டோனீக்கள் யாவர்?

ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (LPA) டோனர், டோனரின் கீழ்கண்ட விவகாரங்களில் முடிவெடுக்கும் அதிகாரத்தை டோனீக்கு வழங்கலாம்:

- தனிப்பட்ட நலன் (சுகாதார முடிவுகள் உட்பட) மற்றும்/அல்லது
- சொத்து மற்றும் விவகாரங்கள் (நிதி விஷயங்கள் உட்பட).

### C2. தனிப்பட்ட நலன் டோனீ

தனிப்பட்ட நலன் டோனீ நீண்டகால அதிகாரப் பத்திரத்தில் கையொப்பமிட குறைந்தபட்சம் 21 வயது நிரம்பிய ஒரு தனிநபராக இருக்க வேண்டும்.

டோனீ ஒரு நபராக இருக்க வேண்டும், எடுத்துக்காட்டாக, "பியோனா பெர்னாண்டஸ்", வேலை தலைப்பு அல்ல, எடுத்துக்காட்டாக, "எனது வழக்கறிஞர்". ஒரு நிறுவனத்தையோ வணிகத்தையோ தனிப்பட்ட நலன் டோனீயாக நியமிக்க முடியாது.

## எனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்ன?

பொதுவாக, டோனர் எங்கு வாழ வேண்டும் மற்றும் அவரது அன்றாட நடவடிக்கைகள் போன்ற விஷயங்களில் டோனரின் சார்பாக முடிவுகளை எடுக்க ஒரு தனிப்பட்ட நலன் டோனீ உதவுகிறார்.

தனிப்பட்ட நலன் டோனீ எடுக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட முடிவுகள் மற்றும் செயல்களின் வகைகள், பின்வருமாறு:

- டோனர் எங்கு வாழ வேண்டும்;
- டோனர் யாருடன் வாழ வேண்டும்;
- தினசரி பராமரிப்பு முடிவுகள் (உதாரணமாக, என்ன உடுத்துவது மற்றும் சாப்பிடுவது);
- என்ன சமூக நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டும்;
- டோனரின் தனிப்பட்ட கடிதங்களைக் கையாளுதல்; மற்றும்
- டோனர் யாருடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலே உள்ள பட்டியலில், தனிப்பட்ட நலன் டோனீ எடுக்கக்கூடிய முடிவுகள் மற்றும் செயல்களின் சில எடுத்துக்காட்டுகள் உள்ளன, ஆனால் இது முழுமையான பட்டியல் அல்ல.

## ட3. ஒரு தனிப்பட்ட நலன் டோனீயாக நான் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை என்ன?

### செய்யக்கூடியவை

நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் கீழ் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் அனைத்து டோனீக்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இது தனிப்பட்ட நலன் டோனீ மற்றும் சொத்து & விவகாரங்கள் டோனீஆகிய இருவருக்கும் பொருந்தும்.

நீங்கள் கண்டிப்பாக:

- சட்டக் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்;
- டோனரின் நன்னலன்களுக்காக செயல்பட வேண்டும்
- நடைமுறை விதிமுறைகளில் உள்ள வழிகாட்டுதலைக் கவனிக்க வேண்டும்;
- டோனரின் அறிவுறுத்தல்களை நிறைவேற்றவும் மற்றும் நீண்டகால அதிகாரப் பத்திரம் வழங்கிய அதிகார வரம்பிற்குள் முடிவுகளை எடுக்க வேண்டும்;
- உங்கள் கடமைகளை நியாயமான அக்கறை மற்றும் திறமையுடன் செய்ய வேண்டும்;
- நேர்மையான நம்பத் தகுந்த வகையில் செயல்படுங்கள்;
- இரகசியத்தன்மையை மதிக்க வேண்டும்; மற்றும்
- பதிவுகளை வைத்திருக்க வேண்டும்.

## செய்யக்கூடாதவை

இங்கே சில முக்கிய குறிப்புகள் உள்ளன, டோனீக்கள் நினைவில் கொள்ள வேண்டும்:

- சுயநலத்திற்க்காக உங்கள் நிலையை உங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளாதீர்கள்;
- உங்கள் அதிகாரத்தை வேறொருவருக்கு வழங்காதீர்கள்; மற்றும்
- டோனர் மற்றும் பொது காப்பாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்காமல் உங்கள் கடமையை கைவிடாதீர்கள்.

டோனிக்கு செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய கூடுதல் வழிகாட்டிகளுக்கு நீங்கள் நடைமுறை விதிமுறைகள் 8.5 பத்தியைப் பார்க்க வேண்டும்.

மேம்பட்ட மருத்துவ வழிகாட்டிக்குறிப்புக்கள் (AMD) சட்டத்தின்படி டோனர் தனது மனநல ஆற்றலைக் கொண்டிருக்கும்போதே, மேம்பட்ட மருத்துவ வழிகாட்டிக்குறிப்புக்கள் (AMD) செய்திருந்தால், மருத்துவர்கள் அவைகளுக்கு இணங்க வேண்டும்.

# C4. மற்ற கட்டுப்பாடுகள்

டோனருக்கு மனநல ஆற்றல் குறைவாக இருந்தால் அல்லது டோனருக்கு அந்த முடிவுகளை எடுக்கும் மனநல ஆற்றல் இல்லை என்று நீங்கள் நியாயமாக நம்பினால் மட்டுமே நீங்கள் டோனரின் சார்பாக முடிவுகளை எடுக்க முடியும். டோனரைப் பாதுகாக்க, டோனரின் சார்பாக பின்வரும் முடிவுகளை எடுக்க சட்டம் உங்களை அனுமதிக்காது:

## மருத்துவ கட்டுப்பாடு

- நீண்டகால அதிகாரப் பத்திரத்தில் டோனர் இதை வெளிப்படையாகக் கூறாத வரையில் (மருத்துவ சோதனை நடத்துவது உட்பட) உடல்நலப் பராமரிப்பை வழங்கும் நபர் சிகிச்சையை மேற்கொள்வதற்கு அல்லது தொடர்வதற்கு நீங்கள் ஒப்புதல் அளிக்கவோ மறுக்கவோ கூடாது.

- செயல்படுத்துவது அல்லது தொடர்வது தொடர்பாக நீங்கள் கீழ்கண்ட எந்த முடிவையும் எடுக்கக்கூடாது:

  - மேம்பட்ட மருத்துவ வழிகாட்டிக்குறிப்புக்கள் சட்டத்தின் 2வது பிரிவின் பொருளில் உள்ள அசாதாரணமான வாழ்வாதார சிகிச்சையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், டோனருக்கு வாழ்வாதார சிகிச்சை வழங்குதல்

  - டோனரின் நிலைமையில் கடுமையான சரிவைத் தடுக்க, சுகாதார சேவையை வழங்கும் நபர் நியாயமாக நம்பும் டோனருக்கு வேறு எந்த சிகிச்சை வழங்கும் முடிவுகள்

நோயாளியின் நன்நலன்களில் எது சிறந்தது என்பதைத் தீர்மானிக்க அவர்களின் தொழில்முறை கடமையால் நிர்வகிக்கப்படும் மருத்துவர்கள், இந்த முடிவுகளை எடுப்பார்கள்.

## கட்டுப்பாட்டின் பயன்பாடு

கட்டுப்பாடு என்பது, டோனீ அல்லது டோனீயின் அங்கீகாரம் பெற்ற ஒருவர் டோனர் செய்ய விரும்பாத செயலை வற்புறுத்தி செய்ய வைக்க பலத்தை உபயோகிப்பது அல்லது பலத்தை உபயோகிப்பதாக பயமுறுத்துவது அல்லது டோனர் தடுத்தாலும் தடுக்காவிட்டாலும் அவர் சுதந்திரமாக எங்கும் செல்வதை தடை செய்வது

உண்மையான உடல் சக்தி அல்லது உடல் சக்தியின் அச்சுறுத்தல் பயன்படுத்தப்படாவிட்டாலும் ஒரு செயல் கட்டுப்படுத்துவதாக வகைப்படுத்தப்படக் கூடும்.

கீழ்கண்ட சந்தர்ப்பங்கள் தவிர நீங்கள் கட்டுப்பாட்டை பயன்படுத்தக்கூடாது:

- டோனருக்கு தீங்கு விளைவதைத் தடுக்க, அவரை கட்டுப்படுத்தும் செயல் அவசியம் என்று நீங்கள் நியாயமாக நம்புகிறீர்கள்
- தடுக்கும் செயல் என்பது டோனர் தீங்கு விளைவித்துக்கொள்ள சாத்தியக்கூறுகள் மற்றும் அந்தத் தீங்கின் தீவிரத்தன்மைக்கு விகிதாசார (சமநிலை) பிரதிபலிப்பாகும்.

## ௫. விலக்கப்பட்ட முடிவுகள் என்ன?

மனநல ஆற்றல் இல்லாத ஒருவரின் சார்பாக சில முடிவுகளை எடுக்க சட்டம் அனுமதிக்காது.

இந்த முடிவுகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| a | திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தல் |
| b | பாலியல் தொடுவதற்கு சம்மதம் தெரிவித்தல் |
| c | மூன்று வருட பிரிவின் அடிப்படையில் விவாகரத்துக்கு சம்மதம் தெரிவித்தல் |
| d | ஒரு தத்தெடுப்பு உத்தரவை உருவாக்க ஒப்புதல் |
| e | ஒரு மதத்தை ஏற்றுக்கொள்வது அல்லது கைவிடுவது |
| f | பாலின மாற்றத்திற்கான சிகிச்சை பெறுதல் |
| g | பாலியல் ஸ்டெரிலைசேஷன் சிகிச்சைக்கு ஒப்புதல் அல்லது அனுமதியை ரத்து செய்தல் |
| h | கருக்கலைப்பை ஒப்புதல் அல்லது கருக்கலைப்பை ரத்து செய்தல் |
| i | மரணத்தின் போது ஒருவரிடமிருந்து ஒரு உறுப்பை அகற்றுவது தொடர்பான ஆட்சேபணையை பதிவு செய்தல் அல்லது திரும்பப் பெறுதல் |
| j | மேம்பட்ட மருத்துவ வழிகாட்டிக்குறிப்புக்களை உருவாக்குதல் அல்லது திரும்பப் பெறுதல் |
| k | ஒரு உடல் அல்லது உடலின் ஏதேனும் ஒரு பகுதியை பரிசாக அளித்தல் அல்லது திரும்பப் பெறுதல் |

## C6. தனிப்பட்ட நலன் டோனீ என்ற முறையில் எனது அதிகாரங்கள் எப்போது முடிவடையும்?

பின்வரும் சந்தர்ப்பங்கள் நிகழ்ந்தால் உங்கள் நியமனம் ரத்துசெய்யப்படும்:

- டோனர் அல்லது நீங்கள் இறந்தால்;
- நீண்டகால அதிகாரப் பத்திரம் இதனால் ரத்து செய்யப்படாது என்று குறிப்பிடவில்லை எனில் டோனருக்கும் உங்களுக்கும் இடையேயான திருமணம் கலைக்கப்பட்டாலோ அல்லது ரத்து செய்யப்பட்டாலோ;
- நீங்கள் ஒரு டோனி என்ற நியமனத்தை முறையாக மறுக்கிறீர்கள்; அல்லது
- உங்களுக்கு மனநல ஆற்றல் இல்லை.

நீண்டகால அதிகாரப் பத்திரம் ஒன்றுக்கு மேற்பட்ட டோனீக்களை கூட்டாகச் செயல்பட நியமித்து, அவர்களில் ஒருவரின் அதிகாரம் ரத்து செய்யப்பட்டால், நீண்டகால அதிகாரப் பத்திரம் வழங்கிய அதிகாரமும் ரத்து செய்யப்படும்.

நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் கீழ் ஒரு மாற்று டோனீ நியமனம் செய்யப்பட்டிருந்தால் அல்லது எந்தவொரு விஷயத்திலும் கூட்டாகவும் தனித்தனியாகவும் செயல்படுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட டோனீக்கள் நியமிக்கப்பட்டிருந்தால் எவ்வாறாயினும், நீண்டகால அதிகாரப் பத்திரம் வழங்கும் அதிகாரம் ரத்து செய்யப்படாது மற்றும் அது செல்லுபடியாகும்.

## C7. சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீ

பொதுவாக, ஒரு சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீ வங்கிக் கணக்கு பரிவர்த்தனைகள் மற்றும் சொத்து போன்ற விஷயங்களில் டோனர் சார்பாக முடிவுகளை எடுக்க உதவுகிறார்.

### எனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்ன?

நீங்கள் எடுக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட முடிவுகளின் வகைகளில் பின்வருவன அடங்கும்:

- சொத்தை கையாளுதல் – சொத்து வாங்குதல், விற்றல், வாடகைக்குஅமர்த்தல் மற்றும் அடமானம் வைத்தல்;
- வங்கிக் கணக்குகளை துவங்குதல், மூடுதல் மற்றும் இயக்குதல்;
- டோனர் சார்பாக பகிர்வுத்தொகைகள், வருமானம், பரம்பரை சொத்து பலன்கள் அல்லது பிற நிதி உரிமைகளைப் பெறுதல்

- வரி விவகாரங்களைக் கையாளுதல்;
- வாடகை செலுத்துதல், அடமானத் தொகையை திருப்பிச் செலுத்துதல் மற்றும் வீட்டுச் செலவுகள்;
- டோனரின் பணத்தை முதலீடு செய்தல்; மற்றும்
- டோனருக்குத் தேவையான வாகனம் அல்லது பிற உபகரணங்களை வாங்குதல்.

மேலே உள்ள பட்டியலில் நீங்கள் எடுக்கக்கூடிய முடிவுகள் மற்றும் செயல்களின் சில எடுத்துக்காட்டுகள் உள்ளன, ஆனால் இது முழுமையான பட்டியல் அல்ல.

## C8. சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீயாக எனது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை என்ன?

### செய்ய வேண்டியவை

நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் கீழ் உங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் நீங்கள் முக்கிய பங்கு வகிக்கிறீர்கள்.

பிரிவு C3 இல் தனிப்பட்ட நலன் டோனீ செய்ய வேண்டிய அதே கடமைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும். கூடுதலாக, நீங்கள் கண்டிப்பாக:

- கணக்குகளை வைத்திருத்தல், மற்றும்
- டோனரின் பணத்தையும் சொத்தையும் உங்கள் தனிப்பட்ட கணக்கிலிருந்து தனித்தனியாக வைத்திருங்கள்.

### செய்யக்கூடாதவை

டோனருக்கு மனநல ஆற்றல் குறைவாக இருந்தால் மட்டுமே நீங்கள் டோனரின் சார்பாக முடிவுகளை எடுக்க முடியும் அல்லது அந்த முடிவுகளை எடுக்கும் மனநல ஆற்றல் டோனருக்கு இல்லை என்று நீங்கள் நியாயமாக நம்புகிறீர்கள்.

டோனரைப் பாதுகாக்க, டோனரின் சார்பாக பின்வரும் முடிவுகளை எடுக்க சட்டம் உங்களை அனுமதிக்காது:

## உயில்கள், காப்பீடு மற்றும் மத்திய சேம நிதி (CPF) விஷயங்கள்

- டோனீயாக இருப்பது தானாக டோனரின் உயிலை நிறைவேற்ற அனுமதிக்காது.
- டோனரின் சார்பாக நீங்கள் பின்வருவனவற்றில் எதையும் செய்ய முடியாது:
  - அவரது காப்பீட்டுக் கொள்கைக்கான வாரிசுதாரரை முன்மொழிதல் அல்லது திரும்பப் பெறுதல்; அல்லது
  - அவரது மத்திய சேம நிதி கணக்குகளுக்கான வாரிசுதாரரை முன்மொழிதல் அல்லது திரும்பப்பெறுதல்.

## பரிசுகள்

- நீண்டகால அதிகாரப் பத்திரத்தில் டோனர் உங்களை அவ்வாறு செய்ய குறிப்பாக அங்கீகரிக்கும் வரை, டோனரின் சொத்திலிருந்து நீங்கள் பரிசுகளை வழங்கக்கூடாது.
- டோனர் அன்பளிப்புகளை வழங்குவதற்கு டோனீக்கு அங்கீகாரம் அளித்தால், டோனர் நீண்டகால அதிகாரப் பத்திரத்தில் வழங்கப்படும் பரிசு அல்லது பரிசுகளின் மதிப்பைக் குறிப்பிடலாம்.
- டோனர் பரிசுகளின் மதிப்பை குறிப்பாகக் கூறாத நிலையில், நீங்கள், பரிசுகளை வழங்கும்போது:
  - அனைத்து சூழ்நிலைகளையும், குறிப்பாக, டோனரின் சொத்தின் அளவையும் கருத்தில் கொண்டு, பரிசுகளின் மதிப்பு நியாயமற்றது அல்ல என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
  - டோனரின் சொத்து அவரது வாழ்நாளில் அவரது பராமரிப்பிற்காக பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை கருத்தில் கொள்ள வேண்டும்.

## A. சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீயாக எனது அதிகாரங்கள் எப்போது முடிவடையும்?

பின்வரும் சந்தர்ப்பங்கள் நிகழ்ந்தால் உங்கள் நியமனம் ரத்துசெய்யப்படும்:

- டோனர் அல்லது நீங்கள் இறந்தால்;
- டோனர் அல்லது நீங்கள் திவாலாகி விட்டால்;
- நீங்கள் ஒரு அறக்கட்டளை நிறுவனம், அதன் உரிமம் காலாவதியானது அல்லது ரத்து செய்யப்பட்டது அல்லது கலைக்கப்பட்டது, நீக்கப்பட்டது, அல்லது நீதித்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள பட்சத்தில்;
- நீண்டகால அதிகாரப் பத்திரம் இதனால் ரத்து செய்யப்படாது என்று குறிப்பிடவில்லை எனில் டோனருக்கும் உங்களுக்கும் இடையேயான திருமணம் கலைக்கப்பட்டாலோ அல்லது ரத்து செய்யப்பட்டால்
- நீங்கள் ஒரு டோனி என்ற நியமனத்தை முறையாக மறுக்கிறீர்கள்; அல்லது
- உங்களுக்கு மனநல ஆற்றல் இல்லை.

நீண்டகால அதிகாரப் பத்திரம் ஒன்றுக்கு மேற்பட்ட டோனீக்களை கூட்டாகச் செயல்பட நியமித்து, அவர்களில் ஒருவரின் அதிகாரம் ரத்து செய்யப்பட்டால், நீண்டகால அதிகாரப் பத்திரம் வழங்கிய அதிகாரமும் ரத்து செய்யப்படும்.

நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் கீழ் ஒரு மாற்று டோனீ நியமனம் செய்யப்பட்டிருந்தால் அல்லது எந்தவொரு விஷயத்திலும் கூட்டாகவும் தனித்தனியாகவும்செயல்படுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட டோனீக்கள் நியமிக்கப்பட்டிருந்தால் எவ்வாறாயினும், நீண்டகால அதிகாரப் பத்திரம் வழங்கும் அதிகாரம் ரத்து செய்யப்படாது மற்றும் அது செல்லுபடியாகும்.

## Q10. மற்ற கேள்விகள்

### டோனியாக நியமிக்கப்படுவதற்கான கோரிக்கையை நான் நிராகரிக்கலாமா?

ஆம், நீங்கள்
பொது காப்பாளர் இணைய அலுவலகம் (OPGO) மூலம் டோனி நியமனத்தை நிராகரிக்கலாம் மற்றும் டோனர் பொது காப்பாளர் இணைய அலுவலகம் (OPGO) மூலம் அறிவிப்பைப் பெறுவார்.

### ஒன்றுக்கு மேற்பட்ட டோனீக்கள் இருக்க முடியுமா?

ஆம், டோனர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட டோனீக்களை நியமிக்கலாம்.

நீங்கள் வேறொரு டோனீயுடன் இணைந்து செயல்படுகிறீர்கள் என்றால், நீங்கள் ஒன்றாகச் செயல்படத் தயாராக இருக்க வேண்டும், எனவே கருத்து வேறுபாடுகள் இணக்கமாகத் தீர்க்கப்படும், இதனால் எந்த முட்டுக்கட்டையும் தவிர்க்கப்படும்.

## Q11. டோனீ எப்படி முடிவுகளை எடுக்க வேண்டும் மற்றும் செயல்பட வேண்டும்?

பின்வரும் வழிகளில் ஒரே விஷயங்களில் முடிவுகளை எடுக்க டோனர் ஒன்றுக்கு மேற்பட்ட டோனீக்களை நியமிக்கலாம்:

- கூட்டாக: டோனீக்கள் ஒன்றாகச் செயல்பட வேண்டும், தனித்தனியாகச் செயல்பட முடியாது.
- கூட்டாகவும் தனித்தனியாகவும்: டோனீக்கள் ஒன்றாக அல்லது தனித்தனியாக முடிவுகளை எடுக்கலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட டோனீக்கள் நியமிக்கப்பட்டாலும், நீங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை டோனர் குறிப்பிடவில்லை என்றால், நீங்கள் கூட்டாகச் செயல்பட வேண்டும் என்று சட்டம் கருதுகிறது.

## Q2. டோனீயாக நான் எப்படிப் பாதுகாக்கப்படுவேன்?

ஒரு டோனீ என்ற முறையில், மனநல ஆற்றல் சட்டத்தின் கீழ் உங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

நீங்கள் உங்களின் உத்தேசிக்கப்பட்ட அதிகாரங்களைச் செயல்படுத்தினால், நீங்கள் செயல்படும் நேரத்தில், அதிகாரம் இல்லாத காரணத்தால் நீங்கள் எந்தப் விளைவுகளையும் சந்திக்க மாட்டீர்கள்: கீழ்கண்ட நேரங்களில் தவிர

- நீண்டகால அதிகாரப் பத்திரம் உருவாக்கப்படவில்லை, என்று உங்களுக்குத் தெரியும், அல்லது
- நீண்டகால அதிகாரப் பத்திரம் உருவாக்கப்பட்டிருந்தால், ஒரு டோனியாகச் செயல்படுவதற்கான உங்கள் அதிகாரத்தை நிறுத்தியிருக்கும் எந்தச் சூழ்நிலையையும் அறிந்திருப்பீர்கள்.

மேற்கூறியவை நீங்கள் தனியாகவோ, அல்லது கூட்டாகவோ மற்றும்/ அல்லது தனி அல்லது கூட்டாகவோ செயல்படும் எல்லா டோனீக்களுக்கும் பொருந்தும்.

# பகுதி D

## டோனீயாக நான் என்ன முடிவுகளை எடுக்க முடியும்?

### D1. நான் என்ன முடிவுகளை எடுக்க வேண்டும், அவற்றை எப்போது எடுக்க வேண்டும்?

a. டோனருக்கு அந்த முடிவுகளை எடுக்கும் மனநல ஆற்றல் இல்லாதபோது மட்டுமே நீங்கள் டோனரின் சார்பாக முடிவுகளை எடுக்க முடியும்.

b. நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (LPA) கீழ் நீங்கள் எடுக்க அங்கீகரிக்கப்பட்ட முடிவுகளை மட்டுமே நீங்கள் எடுக்க முடியும்.

c. உங்களுக்குத் இவை தெரிந்தால், டோனருக்காக நீங்கள் எந்த முடிவையும் எடுக்க முடியாது:

- டோனருக்கு மனநல ஆற்றல் குறைவாக இல்லை அல்லது டோனருக்கு மனநல ஆற்றல் இல்லை என்று நீங்கள் நியாயமாக நம்பவில்லை;
- நீண்டகால அதிகாரப் பத்திரம் உருவாக்கப்படவில்லை (உதாரணமாக, டோனர் நீண்டகால அதிகாரப் பத்திரத்தில் கையொப்பமிட்ட போது டோனருக்கு மனநல ஆற்றல் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும்); அல்லது
- டோனீயாக செயல்படுவதற்கான உங்கள் அதிகாரத்தை நீக்கப்படக்கூடிய
- சூழ்நிலைகள்.

### D2. எப்போது முன்வந்து முடிவெடுக்க வேண்டும் என்று எனக்கு எப்படி தெரியும்?

நீண்டகால அதிகாரப் பத்திரம் பதிவு செய்யப்பட்ட பிறகும், டோனருக்கு மனநல ஆற்றல் இருக்கும் வரை, நீங்கள் முடிவுகளை எடுக்கக் கூடாது. டோனர் தனது மனநல ஆற்றலை இழக்கும் போது மட்டுமே டோனர் சார்பாக முடிவுகளை எடுப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் நீங்கள் அடியெடுத்து வைப்பீர்கள், மேலும் டோனர் தனது மனநல ஆற்றலை மீட்டெடுக்கும் போது தனது சொந்த விஷயங்களை நிர்வகிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

## D3. டோனர் செய்த எந்தவொரு மேம்பட்ட மருத்துவ வழிகாட்டிக்குறிப்புக்களையும் (ACP) கருத்தில் கொள்ளுங்கள்

மேம்பட்ட மருத்துவ வழிகாட்டிக்குறிப்புக்கள் என்பது மனநல ஆற்றலை இழப்பதற்கு முன் டோனர் தனது பராமரிப்பு வழங்குனருடன் செய்த தன்னார்வ பேச்சு வார்த்தையின் தொடர்.

டோனீ டோனருக்கு முடிவுகளை எடுக்கும்போது, டோனர் செய்த எந்த மேம்பட்ட மருத்துவ வழிகாட்டிக்குறிப்புக்களையும் பரிசீலிக்க வேண்டும்.

## D4. ஐந்து சட்டக் கொள்கைகளை நான் எப்படிப் பயன்படுத்துவது?

சட்டப்பூர்வ கொள்கைகள் தனிநபர் முடிந்தவரை முடிவெடுக்க உதவுகின்றன, மேலும் அவ்வாறு செய்வதற்கான மனநல ஆற்றல் இல்லாதபோது அவரைப் பாதுகாக்கின்றன.

மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபரின் சார்பாக முடிவுகளை எடுக்கும்போது அல்லது செயல்படும்போது, ஒவ்வொரு விஷயத்திலும் தகுந்த நடவடிக்கை அல்லது முடிவு எடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, மனநல ஆற்றல் சட்டத்தில் உள்ள விதிகளுடன் இந்த கோட்பாடுகளை படிக்க வேண்டும்.

### கொள்கை 1: மனநல ஆற்றல் இருக்கிறது என்ற உத்தேசம்

முடிவு எடுக்க வேண்டிய நேரத்தில் முடிவெடுக்கும் மனநல ஆற்றல் அவருக்கு இல்லை என்பதற்கான ஆதாரம் இல்லாத போது. ஒரு நபருக்குத் தனக்கென முடிவெடுக்கும் மனநல ஆற்றல் இருப்பதாகக் கருதப்பட வேண்டும்,

மனநல ஆற்றல் குறைபாட்டை மதிப்பிடுவது நபரின் தோற்றம், வயது, நிலை அல்லது நடத்தை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது. எனவே, மக்கள் தங்களால் இயன்றவரை சுயமாக முடிவெடுக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

## சாந்தியின் கதை

சாந்தி சந்து 66 வயதான விவாகரத்து பெற்றவர், அவர் மின்தூக்கி இல்லாத அடுக்குமாடிக் குடியிருப்பில் தனியாக வசிக்கிறார். இவரது குழந்தைகள் ஆறு மாதங்களுக்கு முன் சாலை விபத்தில் உயிரிழந்தனர்.

சாந்தி சமூகத்தில் சுறுசுறுப்பாகவும், உள்ளூர் நடவடிக்கைகளில் பங்கேற்றும் , வசிப்பிட குழு நடவடிக்கைகளில் தொண்டு செய்து கொண்டும் இருந்தவர் .. விபத்து நடந்ததிலிருந்து அவர் யாரிடமும் பேசுவதில்லை.

அடுக்குமாடி தொகுதிக் குழு சுகாதார பேச்சு மற்றும் இலவச சுகாதார பரிசோதனை நடவடிக்கையை ஏற்பாடு செய்கிறது. நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதில் பங்களிக்கும் மனநல ஆற்றல் சாந்திக்கு இல்லை என்று அவர்கள் கருதுவதால், அவரைத் தவிர்க்க குழு பரிசீலித்து வருகிறது.

**யாரிடமும் பேசாமல் தனியாக வாழ்வதால் சாந்திக்கு மனநல ஆற்றல் குறைவு என்று ஏற்பாட்டுக் குழுவினர் கருதக்கூடாது. வேறுவிதமாக நிரூபிக்கப்படாத வரை ஒரு நபர் மனநல ஆற்றல் கொண்டவராக கருதப்படுகிறார். சாந்தியை அழைப்பதை குறித்து ஏற்பாட்டுக் குழு மறுபடியும் பரிசீலிக்க வேண்டும். அதில் ஈடுபடுவது அவர் விருப்பம்.**

### கொள்கை 2: அனைத்து நடைமுறை உதவிகளையும் வழங்குதல்

ஒரு குறிப்பிட்ட முடிவை எடுப்பதில் சிரமம் உள்ள ஒருவரைப் பராமரிக்கும் அல்லது சிகிச்சை அளிக்கும் பராமரிப்பாளர்கள், குடும்ப உறுப்பினர்கள், டோனீக்கள், அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள், அந்த நபர் தனது சொந்த முடிவை எடுப்பதற்கு உதவ அனைத்து நடைமுறை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அவர்கள் ஒரு முடிவை எடுக்க உதவும்போது அவர்கள் ஆதரிக்கும் நபருக்கு மன அழுத்தம் கொடுக்கவோ அல்லது அவர்களின் கருத்துக்களை திணிக்கவோ கூடாது. நபர் எந்த வகையான ஆதரவைப் பெற வேண்டும் என்பது அவர் எடுக்க வேண்டிய முடிவு மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்தது.

ஒரு நபருக்குத் தொடர்புகொள்வதில் சிரமம் இருப்பதால், அந்த நபர் சார்பாக மற்றொருவர் ஒரு முடிவை எடுக்கக் கூடாது. அதற்கு பதிலாக, அந்த நபர் அவருக்கு ஆதரவை வழங்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பெரிய எழுத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் போன்ற அணுகக்கூடிய வடிவங்களில் தகவலை வழங்குவதன் மூலமும், சைகை மொழி, பிரெய்லி போன்ற பல்வேறு வகையான தகவல்தொடர்புகளைப் பயன்படுத்துவதன் மூலமும், அந்த நபர ஆதரவை வழங்கலாம்.

## டிம்மின் கதை

பான் ஐலேண்ட் விரைவுச்சாலையில் ஒரு பாலத்தின் அடியில் வசிக்கும் நடுத்தர வயதான டிம்மை பல காவல் அதிகாரிகள் கண்டனர். அவர் மிகவும் அழுக்காக இருக்கிறார், மேலும் அவரது காலில் நோய்க்கிருமி பாதித்தது போல தெரியும் ஒரு பெரிய வெட்டு உள்ளது. அதனால் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

மருத்துவமனை ஊழியர்கள் டிம்மின் தனிப்பட்ட விவரங்களையும் அவர்கள் தொடர்பு கொள்ளக்கூடிய உறவினர்களையும் கேட்கிறார்கள். அவரைத் தொடர்புகொள்வதற்கு உதவ, இந்த விசாரணைகள் பல மொழிகளில் செய்யப்படுகின்றன. டிம் அமைதியாக இருக்கிறார், மேலும் அவரது காயத்தை பரிசோதிக்க விரும்பும் மருத்துவருடன் ஒத்துழைக்க விரும்பவில்லை.

காயத்திற்கு சிகிச்சையளிக்கப்படாவிட்டால், அவர் தனது காலை இழக்க நேரிடும் என்று, நிலைமையை அவருக்கு விளக்கும் முயற்சியில் மருத்துவர் டிம்மிடம் அவரது காலை அறுப்பது போல் சைகை செய்கிறார். அதற்குப் பிறகு டிமஅதிக கவனம் செலுத்துவதாகத் தோன்றுகிறது மற்றும் தலையை அசைத்துக்கொண்டு அவர் வாய் மற்றும் காதுகளை சுட்டிக்காட்டத் தொடங்குகிறார்

டிம் ஒரு காது கேளாத ஊமையாக இருக்கலாம் என்பதை ஒரு தாதியர் உணர்ந்து, அவருக்கு ஒரு காகிதத்தையும் பேனாவையும் கொடுத்து, சைகை மொழி தெரிந்த ஒருவரை அழைக்கிறார். அவர் அமைதியாகி, மருத்துவமனை ஊழியர்களுடன் எழுத்துப்பூர்வமாக தொடர்பு கொள்ளத் தொடங்குகிறார்.

டிம் வாய்மொழியாக தொடர்பு கொள்ள முடியாமல் இருந்திருக்கலாம், ஆனால் அவரது சிகிச்சை குறித்து அவரால் முடிவெடுக்க முடியாது என்று அர்த்தமில்லை. டிம் தனது முடிவை எடுப்பதற்கும் தெரிவிப்பதற்கும் ஆதரவாக அனைத்து நடைமுறை உதவிகளையும் செய்து மருத்துவக் குழு சரியான முடிவை எடுத்துள்ளது.

அவசரகால சூழ்நிலைகளில், எடுத்துக்காட்டாக, ஒரு நபருக்கு விபத்தில் கடுமையான காயம் ஏற்பட்டால், அந்த நபர் தனது சொந்த முடிவுகளை எடுப்பதற்கு ஆதரவாக பல நடவடிக்கைகளை எடுப்பது நடைமுறையில் சரியாக இருக்காது. என்ன நடக்கிறது மற்றும் ஏன் நடைமுறைகள் செய்யப்படுகின்றன என்பதை அந்த நபருக்குத் தெரியப்படுத்த முடியும்.

## கொள்கை 3: விவேகமற்ற முடிவு

அந்த முடிவுகள் மற்றவர்களின் பார்வையில் விவேகமற்றதாக இருந்தாலும் ஒரு நபர் தனது சொந்த முடிவுகளை எடுக்க சுதந்திரமாக இருக்கிறார். இது ஒரு நபர் தனது சொந்த விருப்பங்களைச் செய்வதற்கான உரிமையை அங்கீகரிக்கிறது. ஒரு முடிவு விவேகமற்றதாக இருப்பதால், அந்த நபர் மனநல ஆற்றலை இழந்துவிட்டார் என்று அர்த்தமல்ல.

இருப்பினும், ஒரு நபர் விவேகமற்ற முடிவெடுப்பதற்கும் (முடிவெடுக்கும் நபர் எடுக்கும் முடிவு) மற்றும் முடிவெடுப்பதற்குத் தேவையான தகவலைப் புரிந்துகொள்வதற்கும், நினைவில் வைத்துக்கொள்வதற்கும் அல்லது பயன்படுத்துவதற்கும் மனநல ஆற்றல் இல்லாதபோது அவர் முடிவெடுப்பதற்கும் வித்தியாசம் உள்ளது.

ஒரு நபரின் வழக்கமான நடத்தையை மனதில் கொண்டு அந்த வழக்கத்திற்கு மாறான பல முடிவுகளை அவர் எடுத்தால், அல்லது அவர் எளிதாக சுரண்டப்படுவதை அல்லது தீங்குக்கு உள்ளாவதை எளிதாக்கும் முடிவுகளை எடுத்தால், அந்த நபரின் மனநல ஆற்றல் குறித்து மேலும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

### ஆ ஹுவாட்டின் கதை

ஆ ஹுவாட்டுக்கு 73 வயது. மனைவியை இழந்த இவர் தனியாக வசித்து வருகிறார். கடந்த வாரம், பால் என்ற ஜன்னல் பொருத்துபவர் ஆ ஹுவாட்டை அவரது வீட்டிற்குச் சென்று பார்த்தார். அவரது குளியலறையில் உள்ள ஜன்னலில் துருப்பிடித்திருப்பதால் அதை மாற்றுமாறு ஆ ஹுவாட்டை பால் வற்புறுத்துகிறார். அடுத்த நாள், பால் திரும்பி வந்து அவரது படுக்கையறையில் உள்ள ஜன்னல்களை மாற்றுமாறு ஆ ஹுவாட்க்கு அறிவுறுத்துகிறார். பால் ஆ ஹுவாட் இடமிருந்து $500 வசூலிக்கிறார்.

ஆ ஹுவாட்டின் மகன் ஆ செங் தனது தந்தையைப் பற்றி கவலைப்படுகிறார். ஆ ஹுவாட் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதால், நிதி விஷயத்தில் பொதுவாகக் கவனமாக இருப்பார்.

பால் மூன்றாவது முறையாகத் திரும்புகிறார், ஆ ஹுவாட் தனது வீட்டில் மீதமுள்ள ஜன்னல்களை $1500க்கு மாற்ற ஒப்புக்கொண்டார். முன்னதாக ஜன்னல்களை ஆராய்ந்த ஆ செங், அவை இன்னும் நல்ல நிலையில் இருப்பதையும், மாற்ற வேண்டிய அவசியமில்லை என்பதையும் கவனித்தார். பால் தனது தந்தையைப் ஏமாற்றியதாக அவர் நம்புகிறார், மேலும் ஆ ஹுவாட் இதேபோன்ற வாங்குதல் முடிவுகளை எடுக்க முடியுமா என்று சந்தேகப்படுகிறார்

அவர் ஒரு சிறந்த பேரம் பெறுவதால், ஜன்னல்களை ஒரே நேரத்தில் மாற்ற விரும்புவதாக ஆ ஹுவாட் விளக்குகிறார். ஓரிரு வருடங்களில் அனைத்து ஜன்னல்களும் மாற்றப்பட வேண்டும் என்று அவர் நம்புகிறார்.

**அவரது தந்தை, ஆ ஹுவாட் 73 வயதாகிவிட்டதால், தனது வீட்டில் உள்ள அனைத்து ஜன்னல்களையும் மாற்ற முடிவு செய்துள்ளதால், அவருக்கு மனநல ஆற்றல் இல்லை என்று ஆ செங் கருத முடியாது. ஆ ஹுவாட்டின் வழக்கமான நடத்தை தொடர்ந்து மாறி கவலையை ஏற்படுத்தினால், ஆஹ செங் அவரது மனநல ஆற்றலை மருத்துவரிடம் பரிசீலிக்க வேண்டும்.**

## கொள்கை 4: நன்நலன்கள்

மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபரின் சார்பாக எடுக்கப்படும் ஒவ்வொரு செயலும் அல்லது முடிவும் அவரது நன்நலனுக்காக எடுக்கப்பட வேண்டும். ஒரு நபரின் நன்நலன்களுக்காக ஒரு முடிவு எடுக்கப்படுகிறதா என்பது அதனதன் சூழ்நிலையைப் பொறுத்தது.

### ரான்'னின் கதை

கெவின் கூ மற்றும் அவரது மனைவி சாலி லீ ஆகியோருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். அவர்களின் மூத்தவர், 23 வயதான ரான், அறிவுசார் ஊனமுற்றவர் மற்றும் ஒரு தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் தங்குமிடப்பட்ட பட்டறையில் பணிபுரிந்து வருகிறார்

மேலும் சுதந்திரமான வாழ்க்கைக்கான அடிப்படை வாழ்க்கைத் திறன்களைப் பெற ரான் போன்ற நபர்களுக்கு தற்காலிக வசிப்பிடத்தை வழங்கும் திட்டத்தையும் தொண்டு நிறுவனம் கொண்டுள்ளது. கொஞ்சம் ஆதரவுடன், பொதுப் போக்குவரத்தை எவ்வாறு உபயோகிப்பது என்பதும் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. இந்த வாழ்க்கைத் திறன்கள் அவர்கள் வேலை வாய்ப்புகளுக்கு மிகவும் பொருந்தவர்களாக இருக்க உதவுகின்றன.

குடியிருப்புத் திட்டத்தில் ஒரு இடம் காலியாக உள்ளது , மேலும் தொண்டு நிறுவனத்தில் உள்ள சமூகப் பணியாளர்கள் ரான் இந்த வாய்ப்பைப் பெற பரிந்துரைக்கின்றனர்.

கெவின் மற்றும் சாலி, ரான் இன்னும் சுதந்திரமாக இருக்க விரும்புகிறார் என்பதை அறிவார்கள். இருப்பினும், ரான் இந்த வாய்ப்பை எடுத்துக் கொண்டால், அவர்களால் ரானைப் பார்த்துக்கொள்ள முடியாது, மேலும் அவர் அவர்களுடன் குறைந்த நேரத்தை செலவிடுவார் என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள்..

**குடியிருப்பு திட்டத்தில் முடிவெடுக்கும் மனநலஆற்றல் ரானுக்கு இருந்தால், கெவினும் சாலியும் அவருக்காக முடிவு செய்யக்கூடாது. ரானுக்கு இந்த முடிவை எடுக்கும்**
**மனநல ஆற்றல் இல்லை என்றால், கெவின் மற்றும் சாலி அவர்கள் ரானின் நன்னலன்களுக்காக செயல்பட வேண்டும், தங்கள் சொந்த நலன்களுக்காக செயல்பட கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.**

## கொள்கை 5: குறைவான கட்டுப்பாடு

மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபரின் சார்பாக செயல்படும் போது அல்லது முடிவெடுக்கும் போது, எடுக்கப்படும் நடவடிக்கை அல்லது முடிவு அந்த நபரின் உரிமைகள் மற்றும் செயல்படும் சுதந்திரத்தை குறைவாக கட்டுப்படுத்தும் ஒன்றாக இருக்க வேண்டும்.

குறைவான கட்டுப்பாடான விருப்பம் பொதுவாக நபரின் நன்நலன்களுக்கான விருப்பமாகும்.

சில நேரங்களில், எந்த நடவடிக்கையும் அல்லது முடிவும் எடுக்காமல் இருப்பதும் இதில் அடங்கும். எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் அல்லது எடுக்கப்பட்ட முடிவுகளும் அல்லது எந்த நடவடிக்கையும் எடுக்காத முடிவுகளும் நபரின் நன்னலன்களுக்காக எடுக்கப்பட வேண்டும்.

### ஆ மெய்யின் கதை


ஆ மெய் முதுமைக்கால மறதி நோயால் பாதிக்கப்பட்ட தனது 80 வயதான தாயார் மேடம் குவாங் சியூ மோயுடன் வசித்து வருகிறார்.

ஆ மெய் வேலைக்குச் செல்லும்போது, அவள் தன்னைத் தானே காயப்படுத்திக் கொள்வதையோ அல்லது அலைந்து திரிவதையோ தடுக்க தன் தாயை அவளது அறையில் பூட்டி வைக்கிறார். அவர் உணவையும் தண்ணீரையும் அறையில் வைத்திருக்கிறார், மேடம் குவாங் வயது வந்தோருக்கான டயப்பர்களை அணிந்துள்ளார்.

ஆ மெய் மாலையில் வீடு திரும்பியதும், அவள் குளித்துவிட்டு தன் தாய்க்கு உணவளிக்கிறாள். ஆ மெய் தனது தாயின் பாதுகாப்பில் அக்கறை கொண்டு செயல்படுகிறார், மற்றும் ஒரு மகப்பேறு மகள் என்றாலும், இந்த வகையான கவனிப்பு, குறைவான கட்டுப்பாடுஅல்ல.

மேடம் குவாங்கை முதுமைக்கால மறதி பகல்நேர பராமரிப்பு மையத்தில் வைப்பது போன்ற வேறு சில பொருத்தமான பராமரிப்பு ஏற்பாடுகளை அவர் செய்ய வேண்டும்.

**ஒன்றுக்கு மேற்பட்ட விருப்பங்கள் இருந்தால், அனைத்து விருப்பங்களும் எடைபோடப்பட வேண்டும் மேலும் எடுக்கப்பட்ட முடிவு நன்னலன்கள் மற்றும் குறைவான கட்டுப்பாட்டு விருப்பக் கொள்கைகளால் தீர்மானிக்கப்பட வேண்டும்.**



# பகுதி E

## ஒரு தகாராறின் போது என்ன நடக்கும்?

### E1. தகராறு ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?

ஒரு தகராறு ஏற்பட்டால், நீங்கள் பின்வரும் முறைகளைப் பயன்படுத்த வேண்டும்:

#### பயனுள்ள தொடர்பு

சில சமயங்களில், தகராறுகள் சரியான தொடர்புஇல்லாததால் அல்லது தவறான புரிதலால் ஏற்படுகிறது. ஒரு நன்நலன்களுக்கான சந்திப்பை நடத்துவது பயனுள்ளதாக இருக்கும், அங்கு வெவ்வேறு நபர்கள் தங்கள் பல்வேறு கருத்துக்களை விவாதிக்கலாம் மற்றும் இந்த கருத்துக்கள் மனநல ஆற்றல் இல்லாத நபரின் நன்நலன்களை எவ்வாறு பாதிக்கலாம் என்று விவாதிக்கலாம். ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் கேட்கவும், கேள்விகள் மற்றும் கவலைகளுக்கு பதிலளிக்கவும் முயற்சி செய்ய வேண்டும்.

#### சமரசம்

வளர்ந்து கொண்டிருக்கும் அல்லது ஆரம்ப கட்டங்களில் உள்ள தகராறுகளைத் தீர்ப்பதற்கு இந்த முறை நல்லது. நீதிமன்றத்திற்குச் செல்வதை விட இது செலவு குறைந்த, விரைவான மற்றும் குறைவான மன அழுத்தம். தரக்கூடிய வழி. ஒரு சுதந்திரமான மூன்றாம் தரப்பு (சமரசம்) தகராறு சமரசத்திற்கு ஏற்றதா என்பதை தீர்மானிக்கிறது. கலந்துரையாடல்களின் மூலம் கட்சிகள் ஒருவருக்கொருவர் மற்றவருடைய கருத்துக்களை புரிந்துகொள்ளவும் , தங்கள் கருத்துக்களை திணிப்பதை விட மனநல ஆற்றல் இல்லாத நபரின் நன்நலன்களில் கவனம் செலுத்தவும் மத்தியஸ்தர் உதவுகிறார்

சமரசம் பற்றி மேலும் அறிய, தொடர்பு கொள்ளவும்:

**சிங்கப்பூர் சமரச நிலையம்**
1 உச்ச நீதிமன்றப் பாதை
நிலை 4
சிங்கப்பூர் 178879
இணையதளம்: www.mediation.com.sg
தொலைபேசி: 6332 4366

**சமூக சமரச நிலையம்**
45 மேக்ஸ்வெல் சாலை
#07-11, நகரச் சீரமைப்பு ஆணையம் (கிழக்கு பிரிவு)
சிங்கப்பூர் 069118
இணையதளம்: cmc.mlaw.gov.sg
தொலைபேசி: 1800 225 5529

## குடும்பச் சேவை நிலையத்தை (FSC) அணுகுதல்

குடும்பம் தொடர்பான பிரச்சனைகளில் ஆலோசனை மற்றும் உதவிக்காக உங்கள் அருகில் உள்ள குடும்பச் சேவை நிலையத்தை அணுகுவதையும் நீங்கள் பரிசீலிக்க விரும்பலாம். தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் தங்கள் உறவுச் சிக்கல்களைத் தீர்க்க உதவுவதற்காக குடும்பச் சேவை நிலையங்களில் பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் உள்ளனர். தனிநபர்கள் மற்றும் குடும்பங்களை ஆதரிப்பதற்கான சமூகம் மற்றும் அரசாங்க வளங்களுக்கான நுழைவுப் புள்ளியாகவும் குடும்பச் சேவை நிலையங்கள் உள்ளது. உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள குடும்பச் சேவை நிலையத்தை கண்டறிய, www.msf.gov.sg/dfcs/familyservice/default.aspx.ஐப் பார்வையிடவும்.

## ஹலிமாவின் கதை

ஹலிமா ஹக்கீம் 72 வயதான முதுமைக்கால மறதி நோய் கொண்ட பெண்மணி. அவர் தனது மகன் அன்வர், அவரது மனைவி நோரா மற்றும் அவர்களது இரண்டு சிறு குழந்தைகளுடன் அவர்களின் வீட்டில் . வசிக்கிறார் (semi-detached). ஹலிமாவுக்கு அஸ்லான் மற்றும் ஆடம் என்ற மேலும் இரண்டு வளர்ந்த குழந்தைகள் உள்ளனர். அன்வர் மற்றும் அவரது மனைவி இருவரும் முழுநேர வேலை செய்கிறார்கள். அவர்கள் வேலையில் இருக்கும்போது ஹலிமாவைப் பராமரிக்க ஒரு உதவியாளரை நியமித்தனர்.

அன்வர் மற்றும் நோரா இன்னும் ஆறு மாதங்களில் மூன்றாவது குழந்தையை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் ஹலிமாவை முதியோர் இல்லத்திற்கு மாற்ற விரும்புகிறார்கள், ஏனெனில் குழந்தை பிறந்தவுடன் அவளுக்கு தங்குவதற்கு தங்களுடைய வீட்டில் போதுமான இடம் இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். அஸ்லானும் ஆடமும் தங்கள் சகோதரருடன் உடன்படவில்லை. இருப்பினும், ஹலிமாவை அவர்களுடன் வாழ வைத்துக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை. மாறாக, தற்போதைய ஏற்பாட்டை அன்வர் தொடர வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

ஹலிமா தனது தனிப்பட்ட நலனுக்காக ஒரு செல்லுபடியாகும் நீண்டகால அதிகாரப் பத்திரத்தை தனக்கு மனநல ஆற்றல் இருந்தபோது செய்தார். அவர் தனது மூன்று மகன்களையும் தனது டோனீக்களாக நியமித்தார்.

அன்வர், அஸ்லான் மற்றும் ஆதம் ஆகியோர் தங்கள் கருத்து வேறுபாடுகளைப் பற்றி பேச முயற்சிக்க வேண்டும் மற்றும் ஹலிமா எங்கு வாழ வேண்டும் என்பது குறித்து பல்வேறு விருப்பங்களைப் பற்றி விவாதிக்க வேண்டும். அவர்களால் ஒரு உடன்பாட்டை எட்ட முடியாவிட்டால், அவர்கள் மத்தியஸ்தம் செய்ய முயற்சி செய்யலாம். அவர்கள் எடுக்கும் எந்த முடிவும் எப்போதும் அவர்களின் தாயின் நன்நலனுக்காக இருக்க வேண்டும்.

## தொழில் வல்லுநர்களுடன் தகராறு

சுகாதாரப் பணியாளர்கள், சமூகப் பணியாளர்கள் மற்றும் பிற நிபுணர்களுடனான மோதல்களைத் தீர்ப்பதற்கான முறைகள் பின்வருமாறு:

a. இரண்டாவது கருத்தைப் பெறுதல் (மருத்துவ மற்றும் சட்ட விஷயங்களுக்கு)

- சில சமயங்களில், அந்த நபரின் மருத்துவரால் வழங்கப்பட்ட மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் மனநல ஆற்றல் இல்லாத நபருக்காக ஒரு டோனீ எடுக்கும் முடிவை ஒரு குடும்ப உறுப்பினர் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். மற்றொரு மருத்துவரிடம் இருந்து இரண்டாவது கருத்தைப் பெறுவதன் மூலம் கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க இது அவர்களுக்கு உதவலாம்.

- சட்ட விஷயங்களுக்கும் இது பொருந்தும். எடுத்துக்காட்டாக, சொத்து மற்றும் விவகாரங்களுக்கான டோனீ ஒரு வழக்கறிஞரின் சட்ட ஆலோசனையின்படி ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்பட விரும்புகிறார். மற்ற டோனீ இந்த ஆலோசனையை ஏற்கவில்லை. மற்றொரு வழக்கறிஞரிடம் இரண்டாவது கருத்தைப் பெறுவதன் மூலம் கருத்து வேறுபாடு தீர்க்கப்படலாம்.

b. வழக்கு சம்பந்தப்பட்ட சந்திப்புகள்

- இந்த வழக்கு சம்பந்தப்பட்ட சந்திப்புகள் தகராறில் உள்ள அனைத்து தரப்பினரையும் சந்தித்து பேசுவதற்கு உதவுகிறது. சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பிற வல்லுநர்கள் இருக்கக் கூடிய விருப்பங்களைத் தெளிவாக விளக்க வேண்டும், அந்த விஷயத்தை ஆதரிப்பதற்கான தங்கள் கருத்துக்களையும் காரணங்களையும் தெரிவிக்க வேண்டும்.

- மூத்த மருத்துவ ஊழியர்களுடன் சந்திப்பு.
  மூத்த மருத்துவ ஊழியர்கள் இரண்டாவது கருத்தை வழங்க அழைக்கப்படலாம்.

- குடும்ப உறுப்பினர்களுக்கு சூழ்நிலையை யோசிக்க நேரம் கொடுத்தல்.
  இந்த விருப்பம் அவசரநிலை இல்லாவிட்டால் மட்டுமே கிடைக்கும்.

- அதிகாரப்பூர்வ புகார் செய்தல்.
  ஒரு சுகாதார நிபுணரைப் பற்றி புகார் செய்யும் போது, நீங்கள் கீழ்கண்டவர்களை தொடர்பு கொள்ள வேண்டும்:

  - சுகாதார நிபுணரின் முதலாளி, மற்றும்

  - அந்தத் தொழிலைக் குறிக்கும் நிபுணர்கள் வாரியம், மன்றம், அல்லது சங்கம்,.

# பகுதி F

## மேலும் தகவலை நான் எங்கே காணலாம்?

மனநல ஆற்றல் இல்லாத நபர்கள் தொடர்பான விஷயங்களில் தகவல் அல்லது உதவி வழங்கக்கூடிய நிறுவனங்களின் பட்டியல் இங்கே உள்ளது.

| அமைப்பு | தொலைபேசி | முகவரி | இணையதளம் |
|---|---|---|---|
| டிமென்ஷியா (முதுமைக்கால மறதி) சிங்கப்பூர் | 6377 0700 | 20 பெண்டிமீர் சாலை #01-02 BS பெண்டிமீர் மையம் சிங்கப்பூர் 339914 | dementia.org.sg |
| பெற்றோர் பராமரிப்புக்கான ஆணையாளர் அலுவலகம் | 1800 111 2222 | 8 லெங்கோக் பாரு #02-01, Family Link @ லெங்கோக் பாரு சிங்கப்பூர் 159052 | msf.gov.sg/maintenanceofparents |
| சமூக சமரச நிலையம் | 1800 225 5529 | 45 மேக்ஸ்வெல் சாலை, #07-11, நகரச் சீரமைப்பு ஆணையம்(URA) (கிழக்கு பிரிவு) சிங்கப்பூர் 069118 | cmc.mlaw.gov.sg |
| குடும்பச் சேவை நிலையம் | - | - | www.msf.gov.sg/dfcs/familyservice/default.aspx |
| மனநல மருத்துவமனை / மனநலக் கழகம் | 6389 2000 | புவாங்காக் பசுமை மருத்துவ பூங்கா, 10 புவாங்காக் வியூ, சிங்கப்பூர் 539747 | www.imh.com.sg |
| சிங்கப்பூர் சமரச நிலையம் | 6252 4226 | 1 உச்ச நீதிமன்றப் பாதை நிலை 4 சிங்கப்பூர் 178879 | www.mediation.com.sg |
| ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு | 1800 650 6060 | - | www.aic.sg |
| சட்ட உதவிப் பிரிவு | 1800 225 5529 | சட்ட சேவைகள் அமைச்சக நிலையம் 45 மேக்ஸ்வெல் சாலை #07-11 (URA) நகரச் சீரமைப்பு ஆணையம் (கிழக்கு பிரிவு) சிங்கப்பூர் 069118 | lab.mlaw.gov.sg |
| சிங்கப்பூர் சட்ட சங்கம் | 6538 2500 | 28 மேக்ஸ்வெல் சாலை #01-03 மேக்ஸ்வெல் சேம்பர்ஸ் சூட்ஸ் சிங்கப்பூர் 069120 | www.lawsociety.org.sg |

# சொற்களஞ்சியம்

## நன்நலன்கள்

மனநல ஆற்றல் இல்லாத நபரின் சார்பாக முடிவெடுப்பதற்கு முன், அவருக்கு எது சிறந்தது என்பதில் கவனம் செலுத்தும் பல காரணிகளைக் கருத்தில் கொள்ள தீர்மானம் எடுப்பவர்கள் கடமைப்பட்டுள்ளனர். மேலும் தகவலுக்கு நடைமுறை விதிமுறைகளின் 6வது அத்தியாயத்தைப் பார்க்கவும்.

## நடைமுறை விதிமுறைகள்

நடைமுறை விதிமுறைகள் மனநல ஆற்றல் சட்டத்தை (சட்டம்) ஆதரிக்கிறது மற்றும் நடைமுறையில் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான கூடுதல் விளக்கத்தை வழங்குகிறது.

## தீர்மானம் எடுப்பவர்

தீர்மானம் எடுப்பவர் மனநல ஆற்றல் இல்லாத நபர்களின் சார்பாக முடிவுகளை எடுக்கும் தனிநபர் அல்லது நபர். அவர்களில் பராமரிப்பாளர்கள், தாதியர்கள், மருத்துவர்கள், நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (LPA) மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் ஆகியோர் அடங்குவர்.

## டோனர்

குறைந்தபட்சம் 21 வயதுடைய நபர், நீண்டகால அதிகாரப் பத்திரம் செய்து, ஒரு நாள் மனநல ஆற்றல் இழந்தால், அவரது தனிப்பட்ட நலன் மற்றும்/அல்லது சொத்து மற்றும் விவகாரங்களைக் கவனித்துக்கொள்வதற்காக டோனீ(க்களை) நியமிப்பார்.

## டோனீ

டோனீக்கள் , குறைந்தபட்சம் 21 வயதிற்குட்பட்டவர்கள், டோனர்களால் தனிப்பட்ட நலன் மற்றும்/அல்லது சொத்து மற்றும் விவகாரங்களில் தங்கள் சொந்த விவகாரங்களை நிர்வகிப்பதற்கான மனநல ஆற்றல் இல்லாத நிலையில், அவர்கள் சார்பாக முடிவுகளை எடுக்கவும், செயல்படவும் நியமிக்கப்படுகிறார்கள்.

## கூட்டாக

டோனீக்கள் ஒன்றாகச் செயல்பட வேண்டும் மற்றும் அனைத்து முடிவுகளிலும் உடன்பட வேண்டும்..

## கூட்டாகவும் தனித்தனியாகவும்

டோனீக்கள் ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ முடிவுகளை எடுக்கலாம்

## நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA)

டோனர் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட டோனீக்களை தானாக முன்வந்து நியமிக்கவும், அவர் தனது சொந்த முடிவுகளை எடுக்கும் திறனை இழந்தால் அவர் சார்பாக செயல்படவும் அனுமதிக்கும் சட்ட ஆவணம்.

## உயிர் காக்கும் சிகிச்சை

வாழ்வாதார சிகிச்சை என்பது ஒரு சுகாதாரத்தை வழங்கும் தனிநபரின் பார்வையில், அந்த நபரின் உயிரைத் தக்கவைக்க அவசியமான சிகிச்சையாகும்.

## சமரசம்

சமரசம் என்பது தகராறுகளைத் தீர்ப்பதற்கான ஒரு முறையாகும். மத்தியஸ்தர் என்று அழைக்கப்படும் ஒரு சுயாதீனமான மூன்றாம் தரப்பு, விவாதத்தின் மூலம் கட்சிகள் ஒருவருக்கொருவர் பார்வையை பார்க்க உதவுகிறார்

## மனநல ஆற்றல்

மனநல ஆற்றல் என்பது ஒரு நபரின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட முடிவை எடுக்கும் திறன் ஆகும்

## பொது காப்பாளர் அலுவலகம் (OPG)

மனநல ஆற்றல் சட்டத்தின் கட்டமைப்பிற்குள், OPG பரந்த அளவிலான பொறுப்புகளைக் கொண்டுள்ளது. நீண்டகால அதிகாரப் பத்திரங்களின் பதிவேட்டை வைத்திருப்பது, அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் தவறான முறையில் நடத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிப்பது ஆகியவை இதில் அடங்கும்.

## பொது காப்பாளர் இணைய அலுவலகம் (OPGO)

OPGO என்பது OPG உடனான பரிவர்த்தனைகளுக்கான எளிய, பாதுகாப்பான மற்றும் வசதியான இணைய தளமாகும். OPGO இல் கிடைக்கும் பரிவர்த்தனைகளில் நீண்டகால அதிகாரப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்தல் மற்றும் அதிகாரம் பெற்ற பிரதிநிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல் ஆகியவை அடங்கும். OPGO ஐ இங்கே அணுகவும்: https://opg-eservice.msf.gov.sg.

## பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள், டோனீகள் திட்டம்

PDD திட்டம் சாதாரணமான மற்றும் குறிப்பிடத்தக்க சொத்துக்களைக் கொண்ட தனிநபர்களை ஆதரிக்கிறது, மேலும் அவர்களுக்கு பதிலாக தீர்மானம் எடுக்கும் நபர்களாக இருக்க குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் இல்லாதவர்கள். இது நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் மூலம் ஒரு பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதியை டோனீயாக நியமிப்பதன் மூலமாகவோ அல்லது நீதிமன்ற உத்தரவின் மூலம் ஒரு அதிகாரம் பெற்ற பிரதிநிதியை நியமிப்பதன் மூலமாகவோ செய்யப்படுகிறது

## தனிப்பட்ட நலன் டோனீ

டோனருக்கு சொந்தமாக இந்த முடிவுகளை எடுக்கும் மனநல ஆற்றல் இல்லாதபோது, டோனரின் சார்பாக தனிப்பட்ட நலன் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்காக டோனரால் நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் கீழ் நியமிக்கப்படும் தனிநபர் நலன் டோனீ. தனிப்பட்ட நலன் சார்ந்த முடிவுகள் என்பது டோனர் எங்கு வசிக்க வேண்டும் மற்றும் டோனருடன் யார் தொடர்பு வைத்திருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம் போன்ற வாழ்க்கை முறை தொடர்பான முடிவுகள் ஆகும்.

## சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீ

சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீ என்பது ஒரு தனிநபர் அல்லது அறக்கட்டளை நிறுவனங்கள் சட்டத்தின் (Cap. 336) கீழ் உரிமம் பெற்ற அறக்கட்டளை நிறுவனமாகும், இது மனநல ஆற்றல் விதிமுறைகளால் பரிந்துரைக்கப்படுகிறது, டோனர் இந்த முடிவுகளை சொந்தமாக எடுக்கும் மனநல ஆற்றல் இல்லாதபோது சொத்து மற்றும் விவகாரங்கள் தொடர்பான முடிவுகளை எடுக்க டோனரால் நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் கீழ் நியமிக்கப்படுகிறார்.

## கட்டுப்பாடு

கட்டுப்பாடு என்பது ஒரு செயலைச் செய்வதற்கு ஒரு தனிநபரை அவர் எதிர்க்கும் போது இணங்கவைக்க உடல் பலத்தை பயன்படுத்துவது அல்லது பயன்படுத்தப்போவதாக பயமுறுத்துவது அல்லது அந்த நபரின் சுதந்திரமான நடமாட்டத்தை கட்டுப்படுத்துவது அந்த நபர் எதிர்த்தாலும் எதிர்க்காவிட்டாலும். ஒரு நபர் உடல் பலத்தை உபயோகிக்காமல் அல்லது உடல்பலத்தை உபயோகிக்கப்போவதாக பயமுறுத்தப்படாமலும் கட்டுப்படுத்தப்படலாம்

## சட்டபூர்வமான கொள்கைகள்

மனநல ஆற்றல் சட்டத்தின் கீழ் ஐந்து சட்டப்பூர்வ கொள்கைகள் உள்ளன, அவை மனநல ஆற்றல் இல்லாத அல்லது மனநல ஆற்றல் இல்லாமலிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நபர்களை கையாளும் போது அனைவரும் பின்பற்ற வேண்டும்.

## அறிவுக்கு மாறான முடிவு

இது சட்டக் கொள்கைகளில் ஒன்றைக் குறிக்கிறது. மனநல ஆற்றல் உள்ள ஒருவருக்கு மற்றவர்களின் பார்வையில் விவேகமற்ற முடிவை எடுக்க உரிமை உண்டு. ஒரு முடிவு விவேகமற்றதாக இருப்பதால், அந்த நபர் மனநல ஆற்றலை இழந்துவிட்டார் என்று அர்த்தமல்ல.

**பொது காப்பாளர் அலுவலகம்**
சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு
3 பீஷான் இடம் #03-00
CPF பீஷான் கட்டிடம்
சிங்கப்பூர் 579838

**தொலைபேசி:** 1800 111 2222
**கோரிக்கைப் படிவம்:** https://go.gov.sg/opg-enquiry
**இணையதளம்:** www.msf.gov.sg/opg

நவம்பர் 2022 பதிப்பு